# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 03 - நேரம்:30 நிமிடம்

## விடைப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

<u>வினாத்தொகுதி:01</u>

**(i) கவிஞர் கூறவிளைந்த பேசுபொருளை(துறை)விளக்குக.**

* ‘பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் திரும்பி வந்து திருமணம் செய்யும் வரையிலான காலத்தில் பிரிவுத் துயரினை தலைவி தாங்கமாட்டாள்’ என கருதி வருந்திய தோழியை நோக்கி, தனது நிலைமையை கழிவிரக்கத்தோடு தலைவி கூறியது

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடலினூடாக தலைவியின் துயர் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக.**

* தலைவனைப் பிரிந்ததால்தான் தன் அழகுநலன்கள் குன்றியதாக வருந்துதல்.
* பிரிவதற்கு முன் தலைவனும் தலைவியும் அளவளாவி சிரித்து மகிழ்ந்தமையை எண்ணி வருந்துதல்.
* ‘‘அல்கலும் தயங்குதிரை பொருத..’’ எனும் வரியூடாக இரவுப் பொழுதில் தலைவி பிரிவுத் துயரால் அதிக துயர் அடைவதாக குறிப்பால் உணர்த்தப்படுகின்றது.
* தன் துயரத்தை தோழிக்கு கூறுவதன் மூலமாகவும் தன் துயர் பகிர்தலை மேற்கொள்கிறாள்.

**(04 புள்ளிகள்)**

**(iii) பாடலில் கையாளப்பட்ட உள்ளுறை உவமத்தை எடுத்து விளக்குக.**

* தாழையின் வெண்ணிறமான பூக்கள் வெண்ணிறமான கடற்பறவைகள் போல தோன்றுகின்றன என்பதன் மூலம் தாழம் பூக்களை கடற்பறவைகள் எனக் கருதி அவற்றை பிறர் கொய்து பயன் கொள்ளாதது போல தலைவனும் தலைவியின் உண்மை நிலையினை உணராது திருமணம் செய்யாது அவளது அழகையும் வாழ்க்கையையும் வீணாக்குகிறான் என்பது குறிப்பாக உணர்த்தப்பட்டது.

* ‘‘அல்கலும் தயங்குதிரை பொருத தாழை வெண்பூ’’ என்பதன் மூலம் தலைவி,இரவு தோறும் விரக வேதகையால் அலைக்கழிக்கப்படுவதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

வினாத்தொகுதி:02

**(i) பாடல் வெளிப்படுத்தும் பிரதான செய்தியை எடுத்துக்காட்டுக.**

* நெய்தல் நிலத்து தலைவனான சேர்ப்பனோடு அளவளாவி சிரித்து மகிழ்வதற்கு முன்பு தலைவியின் கண்ணும் தோளும் நெற்றியும் நல்லவனாய் பொலிவுடன் விளங்கின. ஆனால் அவன் பிரிந்து சென்றபின் அவை முன்பு போல் இராது பொலிவிழந்து விட்டன. என்பதால் தலைவனின் பிரிவினால் தலைவியின் அழகு அழிந்தது எனலாம்.

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடலில் புலவர் தம் கருத்தை வெளிப்படுத்த கையாளும் உத்திகளை எடுத்து விளக்குக.**

* தலைவனைப் பிரியமுன் இருந்த தலைவியின் அழகினை பூவை ஒத்த கண்கள் எனவும் மூங்கிலைப் போல அழகும் வெற்றியும் வலிமையும் பெற்ற தோள்கள் எனவும் பிறையைப் போன்ற கண்டார் அறிவை மயக்கச் செய்யும் நெற்றி எனவும் வர்ணித்தமை.

* கடற்கரையிலுள்ள தாழையின் வெண்ணிறப் பூக்களை நாரைகள் என நினைத்து, பிறர் கொய்யாது விடுதல் போல தலைவியின் உண்மை நிலையினை உணராத தலைவன் அவளைத் திருமணம் செய்யாது அவளின் அழகையும் வாழ்வையும் வீணாக்குகின்றான் எனும் உள்ளுறை உவமை மூலம் இக்குறிப்பு பொருளை உணர்த்தியமை.

* அலைகளால் மோதப்பட்ட தாழையினது வெண்பூ நாரையைப் போல மலர்ந்து தோன்றும் பெருந்துறைகளைக் கொண்ட அகன்ற நீர்ப்பரப்பை உடைய சேர்ப்பன் என விழித்து, நெய்தல் நிலச் சம்பவத்தை காட்சியாக்கி காட்டியமை.

**(04 புள்ளிகள்)**

**(iii) பாடலில் துலங்கும் நெய்தல் நிலச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.**

* அகன்ற நீர்ப்பறப்பை உடையது என்பது ‘பெருந்துறை விரிநீர்’ என சிறப்பிக்கப்பட்டது.
* நீண்டு வளர்ந்த தாழை மரங்களில் வெண்ணிறப் பூக்கள் மலர்ந்திருப்பதும் நாரை தங்கியிருப்பதுமான துறை.
* நெய்தல் நிலத் தலைவன் சேர்ப்பன் என வழங்கப்படுகிறான்.

**(04 புள்ளிகள்)**

வினாத்தொகுதி:03

**(i) பாடலின் திணையையும் துறையையும் குறிப்பிட்டு விளக்குக.**

- **திணை:** நெய்தல்.
- **துறை கூற்று:** வரைவிடை(திருமணத்துக்கு முன்) ஆற்றாள்(தாங்கமாட்டாள்) எனக் கவன்ற(வருந்திய) தோழிக்குக் கிழத்தி (தலைவி) உரைத்தது.

**(ii) தலைவியை தாழம்பூவாக புலவர் குறிப்பிட்டதன் பொருத்தப்பாட்டை ஆராந்து குறிப்பிடுக.**

| **தாழம்பூ** | **தலைவி** |
|---|---|
| வெண்மை நிறமானது | வெண்மை நிறமானவள் |
| கவர்ச்சியானது | கண், தோள், நெற்றி என்பவற்றால் கவரக்கூடியவள் |
| வாசனை மிகுந்தது | வாசனை மிகுந்தவள் |
| தன் பூப் பாரத்தால் வளைந்திருப்பது | தன் அழகிய உறுப்புக்களால் வளைந்திருத்தல் |
| அழகும் மென்மையும் வாய்ந்தது | அழகும் மென்மையும் உள்ளவள் |
| அலைகளால் அலைக்கழிக்கப்படுவது | தலைவனால் அலைக்களிக்கப்படுவள் |
| சூடிக்கொள்ளாத பூ | பயன்படுத்தாமல் அழகை அனுபவிக்காமல் விடுதல் |

**(04 புள்ளிகள்)**

**(iii) தலைவியின் அழகு நலன்களாக பாடலில் குறிப்பிடப்படுவனவற்றை எடுத்து விளக்குக.**

* தலைவியின் கண்கள் மலரைப் போல (தாமரை) விளங்குவதால் அழகும் கவர்ச்சியும் உடையது.
* அவளது தோள்கள் மூங்கிலைப் போல வழுவழுப்பான தன்மையும் அழகும் வெற்றியும் வலிமையும் பெற்றனவாக விளங்குகின்றன.
* தலைவியின் நெற்றி காண்போரின் அறிவை மயக்கச் செய்யும் பிறை என்று சொல்லும்படியாக விளங்கியது.

**(04 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:04</u>

**(i) இப்பாடலில் மேல்வரும் சொற்கள் எவ்வெப் பொருள்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

- விறல் வனப்பு - பிறிதொன்றிற்கும் இல்லாத பேரழகு
- சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்
- தயங்கல் - ஒளி செய்தல்
- நகுதல் - சிரித்தல் (இங்கு கூடி மகிழ்தலைக் குறிக்கிறது)

**(04 புள்ளிகள்)**

**(ii) "தயங்கு நிரை பொருத தாழை வெண்பூக் குருகு என மலரும்" எனும் தொடரின் ஊடாக சித்திரிக்கப்பட்ட விடயத்தை எடுத்துக்காட்டுக.**

- தாழையினது வெண்ணிறப் பூ நாரையைப் போல பெருந்துறையில் பூத்துள்ளது. அதனைக் குருகு என மயங்கி ஒருவரும் பறிக்க முயலாமல் அதன் வாழ்வு கழிவது போல, தலைவனால் இன்பம் அனுபவிக்கப்படாது வாழும் தலைவியின் நிலை குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாாடலில் வெளிப்படும் சங்ககால அகத்திணைப் புண்புகளை எடுத்துக்காட்டுக.**

* முதல் எனும் நெய்தல் நில கடற்துறையும் கரு எனும் தாழையும் நாரையும், தாமரையும், மூங்கிலும், சேர்ப்பனும் உரி எனும் இரங்கலும் அமையப் பெற்றது.
* ''தயங்குதிரை பொருதாழை வெண்பூக் குருகென மலரும் பெருந்துறை'' எனும் தொடரில் உள்ளுறை உவமைக் குறிப்பு பயன்படுத்தப்பட்டது.
* நாடகப் பாங்கு: தலைவி கூற்றாக பெயர் சுட்டாமல் அமைந்துள்ளது.
* அகவற்பாவால் ஆன ஏழு அடிகளை உடையது.
* பிரிவுத்துயரை தாங்காள் என கவலையுற்ற தோழிக்கு தலைவி கூறிய துறையாக அமைந்துள்ளது.

**(04 புள்ளிகள்)**